1971 ஜூலை 15]

சிறப்பு அங்காடிகள்.

***254 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிறு நகரங்களிலும், பெரு நகர பஞ்சாயத்துக்களிலும் கூட்டுறவு முறையில் சிறப்பு அங்காடிகள் ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: இந்தக் கூட்டுறவு சிறப்பங்காடிகளில் தாமாகவும், நியாயமான விலையிலும் பொருள்கள் மக்களுக்குக் கிடைப்பதால் எல்லா நகராட்சி மன்றப் பட்டணங்களிலும் வளர்ச்சியுற்ற நகரங்களிலும் விரைந்து இத்திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இப்போது இந்த மினி சூப்பர் மார் கேட்ஸ், சிற்றங்காடிகள், 28 சிறிய நகரங்களில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, அல்லது நடைபெறும் தருவாயில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு எங்கேயாவது நாள் ஒன்றுக்கு ரூ. 2,000 அளவிற்கு விற்பனையாகக் கூடிய இடத்தைச் சொல்வார்களானால் அங்கேயும் தொடங்குவதற்கு அரசு தயாராகயிருக்கிறது. இதுவரையில் 28 சிற்றங்காடிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. 100 வரையில் தொடங்குவதற்கு நிதி வசதி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரம் முடிவுற்றது. கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நீட்டித்து மீதிக்கேள்விகளை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கும்படி அவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. பா. சாரதி: தமிழ்நாட்டில் நடைபெற்றுவரக்கூடிய சூப்பர் மார்கேட்ஸ் எவ்வளவு லாபகரமாக நடக்கிறது? எவ்வளவு நஷ்டத்தில் நடக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இந்தச் சிறப்பங்காடிகள் இரண்டு வகைப்படும். ஒன்று சூப்பர் மார்க்கெட், பேரங்காடி, இன்னொன்று சிற்றங்காடி. 13 இடங்களில் பேரங்காடிகள் நடைபெறுகின்றன. திருச்சி நகரத்திலும் மதுரை நகரத்திலும் தவிர, மற்றவிடங்களிலும் நஷ்டமில்லாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சிற்றங்காடிகள், கோவையில் சர்க்கார் ஊழியர்களுக்கென்று நடைபெறுகின்ற ஒரு தனி சிற்றங்காடி தவிர, நஷ்டத்தில் நடைபெறவில்லை.

திரு. மா. சுப்பிரமணியன்: கோவையில் நடைபெறுகிற சிறப்பங்காடியில் லாபம் மிக அதிகமாகக் கிடைக்கிறது. அந்தஅளவிற்கு லாபம் மற்ற சிறப்பங்காடிகளிலும் கிடைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இதற்காக ஒரு கருத்தரங்கினை விரைவில் கூட்டி, எப்படி சிந்தாமணி என்ற பேரங்காடி கோவையில் ஆண்டு ஒன்றுக்கு நான்கு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வருவதோடு மட்டுமல்லாமல் மக்களுக்குப் பெரிய பணி செய்யக் கூடிய அளவில் நடைபெற்று வருகிறதோ, அதேபோல் மற்ற ஊர்களிலும் ஏன் அப்படி நடைபெறக் கூடாது என்பதை ஆராய்வதற்கு, ஒரு கருத்தரங்கு விரைவில் நடைபெற இருக்கிறது. அதற்குப் பிறகு முடிவுகள் எடுக்கப்படும்.

[1971 ஜூலை 15

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that super markets are generally the luxury of advanced countries where it is difficult to sell goods and ordinary well-established markets with less expenses are enough for countries where there is shortage and particularly to India and Tamil Nadu?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Probably the hon. Member is under the impression that the State Government's monies are involved in this matter.

THIRU K. M. SUBRAMANIAM : Whomsoever's monies they are, it is national wealth. That is all.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : As I answered, excep. in the case of Tiruchirappalli super market and Madurai super market, all the other super markets are not losing money, but they are helping to hold the price line. Similarly in smaller municipalities and major town panchayats we have started mini-super markets in 28 of them. Exception in that special mini market opened for public servants in Coimbatore, all the mini markets are not losing. We are satisfied that we are not losing. The object is to hold the price line.

திருமதி. த. ந. அனந்தநாயகி : இந்தக் கூட்டுறவு சிறப்பங்காடிகள் எல்லாம் சொந்தக் கட்டடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றனவா ? அல்லது தனி நபர் கட்டடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : சில அங்காடிகள் சொந்தக் கட்டடங்களில் இருக்கின்றன. சில வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன.

ஆடுதுறையிலுள்ள விவசாயப் பண்ணைக் கட்டடம்.

*235 வினா.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆடுதுறையில் தற்போது காலியாக உள்ள அரசாங்க விவசாயப் பண்ணைக் கட்டடங்களை சுற்றுலா மாளிகையாக ஆக்க திட்டம் ஏதேனும் தற்போது அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆடுதுறையிலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது அரசுக்கட்டிடம் எதுவும் காலியாக இல்லை. அங்குள்ள கட்டிடத்தைச் சுற்றுலா மாளிகையாக்கும் திட்டம் எதுவும் இல்லை.

மின்சாரம் விநியோகம் செய்யும் தனியார் கம்பெனிகள்.

*256 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மின்சாரம் விநியோகம் செய்யும் தனிப்பட்ட கம்பெனிகள் ஏதேனும் உள்ளனவா ?